பேருந்து நிலைய விவகாரம்: தருமபுரியில் கடையடைப்பு போராட்டம்





தருமபுரி பழைய பேருந்து நிலையம் அருகே வியாழக்கிழமை மூடப்பட்ட கடைகள். (வலது) போராட்டத்தில் ஈடுபட்ட வணிகர் சங்கத்தினர்.

தருமபுரி, பிப். 26: தருமபுரியில் பேருந்து நிலைய இடமாற்றத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, வணிகர்கள் கடையடைப்பு மற்றும் மறியல் போராட்டத்தில் வியாழக்கிழமை ஈடுபட்டனர். இதில், சாலை மறியலில் ஈடுபட்டதாக 45 பேர் கைது செய்யப்பட்டனர்.

தருமபுரி நகரின் மையப் பகுதியில் செயல்பட்டு வந்த புறநகர் பேருந்து நிலையம் கடந்த பிப். 5-ஆம் தேதி பென்னாகரம் சாலையில் உள்ள சோகத்தூர் பகுதியில் அமைக்கப்பட்ட புதிய பேருந்து நிலையத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டது. இதனால், அரூர், பாப்பிரெட்டிப்பட்டி, திருவண்ணாமலை, திருப்பத்தூர் பகுதிகளைச் சேர்ந்த பயணிகள் பாதிப்புக்குள்ளாயினர். மேலும், தருமபுரி நான்குசாலை பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

இதன் காரணமாக, அரூர், பாப்பிரெட்டிப்பட்டி, திருவண்ணாமலை, திருப்பத்தூர் மார்க்கமாக செல்லும் பேருந்துகளை பழைய ராஜகோபால் கவுண்டர் புறநகர் பேருந்து நிலையத்திலிருந்து இயங்க மாவட்ட நிர்வாகம் அனுமதி அளித்தது.

ஆனாலும், சில வணிகர் சங்கத்தினர் பேருந்து நிலையம் பழைய இடத்திலேயே தொடர வேண்டும் என வலியுறுத்தி போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், தருமபுரி மாவட்ட மற்றும் நகர, அனைத்து வணிகர் சங்கம் சார்பில், இதே கோரிக்கையை வலியுறுத்தி ஒருநாள் முழு கடையடைப்பு போராட்டத்தில் வியாழக்கிழமை ஈடுபட்டனர்.

இதில், தருமபுரி பழைய பேருந்து நிலையம் மற்றும் சுற்றுப் புற பகுதிகள், நகர பகுதிகள், கடை வீதி, நான்குசாலை பகுதி, நேதாஜி புறவழிச்சாலை, அரசு மருத்துவமனை, இலக்கியம்பட்டி உள்ளிட்ட நகர மற்றும் புறநகர் பகுதிகளில் சுமார் 60 முதல் 70 சதவீத கடைகள் அடைக்கப்பட்டன. நகர பேருந்துகள், ஆட்டோக்கள் வழக்கம்போல இயங்கின.

கோரிக்கையை வலியுறுத்தி மத்திய பேருந்து நிலையம், நான்கு சாலை, ஆட்சியரகம் உள்பட பல்வேறு பகுதிகளில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதையடுத்து, அனுமதியின்றி போராட்டத்தில் ஈடுபட்டதாக 45 பேரை போலீஸார் கைது செய்தனர்.

இதுகுறித்து தருமபுரி நகர வர்த்தக சங்கச் செயலாளர் சி. ரவிச்சந்திரன் கூறுகையில், பழைய பேருந்து நிலையம் இடமாற்றம் செய்யப்பட்டதால், பலரது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். இதைக் கண்டித்து, இந்த கடையடைப்பு போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. இதில் பெரும்பாலான கடைகள் மூடப்பட்டன. இதனால், சுமார் ரூ. 34 கோடி வர்த்தகம் பாதிக்கப்பட்டது என்றார்.

கூட்டுறவு மேலாண்மை பட்டய பயிற்சியாளர்களுக்கு பட்டயம்



பயிற்சியாளர்களுக்கு பட்டயம் வழங்கிய கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் கோ.நடராஜன்.

கிருஷ்ணகிரி, பிப். 26: பர்கூர் கூட்டுறவு மேலாண்மை பட்டயப் பயிற்சியாளர்களுக்கு 2024-2025-ஆம் ஆண்டுக்கான பட்டயம் வழங்கும் விழா அண்மையில் நடைபெற்றது.

பர்கூர் கூட்டுறவு மேலாண்மை நிலையத்தில் நடைபெற்ற இந்த விழாவுக்கு, கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் கோ.நடராஜன் தலைமை வகித்து சான்றிதழ்களை வழங்கினார். கிருஷ்ணகிரி சரக துணைப் பதிவாளர் ப.பாலமுருகன், பர்கூர் கூட்டுறவு தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் கு.சுப்பிரமணி உள்ளிட்டோர் பங்கேற்றனர். இதில், 100 சதவீத தேர்ச்சி அளித்த கௌரவ விரிவுரையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

நோய் குணமாகாத விரக்தியில் இளைஞர் தற்கொலை

தருமபுரி, பிப். 26: தருமபுரியில் நோய் குணமாகாததால் விரக்தியடைந்த இளைஞர் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார்.

தருமபுரி நகரம், மொட்டையன் தெருவைச் சேர்ந்தவர் த.சந்துரு (23). பேனர் ஒட்டும் தொழில் செய்துவந்த இவருக்கு, மஞ்சள் காமாலை நோய் இருந்துள்ளது. பல்வேறு இடங்களில் சிகிச்சை பெற்றும் குணமாகாததால், விரக்தியில் இருந்தார்.

இந்நிலையில், கடந்த பிப். 13-ஆம் தேதி மதுவில் விஷம் கலந்து குடித்துவிட்டு கங்கை அம்மன் கோயிலில் மயங்கி விழுந்தார். அதைக் கண்ட அக்கம்பக்கத்தினர் சந்துருவை மீட்டு தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தனர். பின்னர் மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி சந்துரு புதன்கிழமை இறந்தார். இதுகுறித்து தருமபுரி நகர காவல் நிலைய போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

கிராவல் மண் கடத்திய லாரி பறிமுதல்

தருமபுரி, பிப். 26: தருமபுரியில் கனிம வளத் துறையினர் மேற்கொண்ட சோதனையில், அரசு அனுமதியின்றி கிராவல் மண் கடத்திய டிப்பர் லாரியை போலீஸார் பறிமுதல் செய்தனர்.

தருமபுரியில் அரசு அனுமதியின்றி குவாரிகளிலிருந்து கிராவல் மண் கடத்திச்சென்று வெளியிடங்களில் விற்பனை செய்வதாக புவியியல் மற்றும் சுரங்கத் துறையினருக்கு தகவல் வந்தது. அதன்பேரில், உதவி புவியியலாளர் புவனமாணிக்கம் தருமபுரி - மொரப்பூர் சாலையில் புதன்கிழமை வாகனத் தணிக்கையில் ஈடுபட்டார்.

அப்போது, அந்த வழியாக வந்த லாரியை நிறுத்தி சோதனை செய்ததில், அரசு அனுமதி உள்ளிட்ட எந்த ஆவணங்களும் இன்றி மண் கடத்தலில் ஈடுபட்டது தெரியவந்தது. விசாரணையின்போது லாரி ஓட்டுநர் அங்கிருந்து தப்பியோடினார்.

இதையடுத்து, லாரியை போலீஸார் பறிமுதல் செய்து மதிகோண்பாளையம் காவல் நிலையத்தில் நிறுத்தினர். லாரி உரிமையாளர் மற்றும் ஓட்டுநர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி உதவி புவியியலாளர் புவனமாணிக்கம் புகார் அளித்ததன் பேரில், வழக்குப் பதிவுசெய்த போலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

பாலியல் தொந்தரவு: இரண்டரை வயது குழந்தை உயிரிழப்பு

விவசாயி கைது

ஒசூர், பிப். 26: அஞ்செட்டி அருகே பாலியல் தொந்தரவில் இரண்டரை வயது குழந்தை இறந்த சம்பவத்தில், போக்சோ பிரிவில் விவசாயி வியாழக்கிழமை கைது செய்யப்பட்டார்.

கிருஷ்ணகிரி மாவட்டம், அஞ்செட்டி அருகே உள்ள கிராமத்தைச் சேர்ந்தவர் 24 வயது இளம்பெண். இவர் ஒசூரில் கட்டட வேலை செய்துவந்த திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த 28 வயது தொழிலாளியை காதல் திருமணம் செய்துகொண்டார். இரண்டரை வயது பெண் குழந்தையுடன் திருவண்ணாமலை மாவட்டத்தில் வசித்து வந்த இவர்களுக்கிடையே குடும்பத் தகராறு ஏற்பட்டது. இதன் காரணமாக, இளம்பெண் கணவரைப் பிரிந்து குழந்தையுடன் அஞ்செட்டி அருகே உள்ள பெற்றோர் வீட்டுக்கு வந்தார்.

இந்நிலையில், கடந்த டிச. 11-ஆம் தேதி குழந்தைக்கு வலிப்பு வந்ததாகக் கூறி அஞ்செட்டியில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு இளம்பெண் கொண்டு சென்றார். அங்கு குழந்தையை பரிசோதனை செய்த மருத்துவர்கள் குழந்தை இறந்துவிட்டதாக கூறினர்.

இதையறிந்த குழந்தையின் தந்தை, குழந்தையின் இறப்பில் சந்தேகம் இருப்பதாக அஞ்செட்டி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில் போலீஸார் வழக்குப் பதிவுசெய்து விசாரணை நடத்தி வந்தனர்.

இதனிடையே, பிரேத பரிசோதனை அறிக்கையில் குழந்தையின் உடலில் உள்காயங்கள் இருந்தது தெரியவந்தது. இதைத் தொடர்ந்து போலீஸார் தீவிர விசாரணை நடத்தினர்.

அதில், இளம்பெண்ணுக்கும், ஜேசுராஜபுரத்தை அடுத்த கோம்மைகாடு கிராமத்தைச் சேர்ந்த விவசாயி பெரியநாயகம் (40) என்பவருக்கும் இடையே தகாத உறவு இருந்துவந்தது தெரியவந்தது. மேலும், இளம் பெண் இல்லாத நேரத்தில் அவர் குழந்தைக்கு பாலியல் தொந்தரவு செய்ததும், அதில் குழந்தை உடல்நலம் பாதிக்கப்பட்டு இறந்ததும் தெரியவந்தது.

இதையடுத்து, பெரியநாயகத்தை கைதுசெய்த அஞ்செட்டி போலீஸார், அவர்மீது போக்சோ பிரிவின்கீழ் வழக்குப் பதிவுசெய்தனர். தொடர்ந்து அவரை கிருஷ்ணகிரி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி தருமபுரி கிளை சிறையில் அடைத்தனர்.

தருமபுரி காலபைரவர் கோயிலில் பக்தர்கள் தங்கும் விடுதி திறப்பு



தருமபுரி, அதியமான்கோட்டை பகுதியில் அமைந்துள்ள காலபைரவர் கோயிலில் பக்தர்கள் தங்கும் விடுதி தொடக்க நிகழ்வில் பங்கேற்ற மக்களவை உறுப்பினர் ஆ.மணி, சட்டப் பேரவை உறுப்பினர் எஸ்.பி.வெங்கடேஸ்வரன் உள்ளிட்டோர்.

தருமபுரி, பிப். 26: அதியமான்கோட்டை காலபைரவர் கோயிலில் பக்தர்கள் தங்கும் விடுதியை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலிக் காட்சி வாயிலாக வியாழக்கிழமை திறந்துவைத்தார்.

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியம், அதியமான்கோட்டையில் பழைமை வாய்ந்த தட்சிணகாசி காலபைரவர் கோயில் அமைந்துள்ளது. இங்கு தேய்பிறை அஷ்டமி தினத்தில் வழிபட்டால் கூடுதல் பலன் கிடைக்கும் என கூறப்படுகிறது. எனவே, மாதந்தோறும் அந்த தினத்தன்று தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்கள் மட்டுமன்றி, கேரளம், ஆந்திரம், கர்நாடகம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்தும் அதிக அளவிலான பக்தர்கள் இக்கோயிலுக்கு வந்து தரிசனம் செய்வர்.

இவ்வாறு அதிக அளவில் பக்தர்கள் வந்து செல்லும் நிலையில், வெளியூர் பக்தர்கள் தங்க வசதி இல்லாமலிருந்தது. இது தொடர்பாக பக்தர்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்த நிலையில், அதியமான்கோட்டை அருகே பண்பலை வானொலி நிலையம் எதிரில், பைரவர் கோயிலுக்கு வரும் பக்தர்கள் தங்கிச்செல்லும் வகையில் இந்து சமய அறநிலையத் துறை சார்பில் தங்கும் விடுதி அமைக்க திட்டமிடப்பட்டது. பின்னர் ரூ. 1.79 கோடியில் 10 அறைகளுடன் கூடிய தங்கும் விடுதி அமைக்கும் பணி ஓராண்டுக்கு முன்பு தொடங்கி தற்போது முடிவுற்றது.

இதையடுத்து,, சென்னையிலிருந்து தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வியாழக்கிழமை காணொலிக் காட்சி வாயிலாக பக்தர்கள் தங்கும் விடுதியை திறந்துவைத்தார். அதைத் தொடர்ந்து, தருமபுரி மக்களவை உறுப்பினர் ஆ.மணி விடுதி வளாகத்தில் குத்துவிளக்கு ஏற்றி இனிப்புகள் வழங்கி விடுதி வளாகத்தை பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், தருமபுரி சட்டப் பேரவை உறுப்பினர் எஸ்.பி. வெங்கடேஸ்வரன், இந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

அசல் நிலம் / சொத்து ஆவணம் காணவில்லை

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், கெலவள்ளி கிராமம், மாவடிபட்டி, க.எண் 4/774 முகவரியில் வசித்து வரும் (லேட்) பாபுசிங் அவர்களின் மனைவி **சங்கீதா பாபுசிங்** (ஆதார் எண் : 4645 0250 2111), 75 வயதுடைய நான் இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவித்துக்கொள்வது யாதெனில் சென்னை–05, திருவல்லிக்கேணி சார்பதிவாளர் அலுவலகத்தில் 13.02.1957 ஆம் ஆண்டு எனது பாட்டி ரத்னாபாய் பெயரில் பதிவு செய்யப்பட்ட எங்களுக்கு சொந்தமான அசையாச் சொத்தின் மூல ஆவணம் எண் : 136/1957, ஜெராக்ஸ் எடுப்பதற்காக 22.02.2026 அன்று மாவடிப்பட்டியிலிருந்து டவுன் பஸ்சில் சென்ற போது தொலைந்து விட்டது. யாரேனும் அதனைக் கண்டெடுத்தால் எனது 8940241005 கைப்பேசி எண்ணிற்கு அல்லது மேற்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா
सेन्ट्रल बैंक ऑफ़ इंडिया
Central Bank of India
CENTRAL TO YOU SINCE 1911
மண்டல அலுவலகம் : 14/15, வெரைட்டி ஹால் ரோடு, கோவை - 641 001

மாபெரும் மின்னணு ஏல அறிவிப்பு
(E-Auction Notice)
(SARFAESI சட்டம் 2002–ன் கீழ்)

SARFAESI சட்டம் 2002 மற்றும் அதன் பிரிவு 13 (4) ன் கீழ் அதிகாரம் பெற்ற சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா வங்கி அதிகாரி பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் சொத்துக்களை கீழ்க்கண்ட தேதிகளில் சுவாதீனம் எடுத்திருந்தார், இதனைத்தொடர்ந்து கீழ்க்கண்ட தேதிகளில் மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 13(2)ன் கீழ் பின்வரும் கடன் கணக்குகளில் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ள வங்கிக்கு வர வேண்டிய கடன் நிலுவைத் தொகைகளை வட்டியுடன் வசூலிக்கும் விதமாக பட்டியலில் கண்டுள்ள சொத்துக்களை விற்பனை செய்யும் உரிமையுடன் கூடிய கேட்பு அறிவிப்பினை அனுப்பியிருந்தார். ஆனால் கடன்தாரர் / உத்தரவாதம் அளித்தவர் / அடமானம் வைத்தவர் கடன் நிலுவைத் தொகைகளை திருப்பிச் செலுத்த தவறியதால், இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரி மேலே குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 13 (4) (a) மற்றும் விதி 8 மற்றும் 9 ன் கீழ், தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் வங்கிக்கு வர வேண்டிய நிலுவைத் தொகைகளை வசூல் செய்திட உள்ளார். இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரியின் மூலமாக https://baanknet.com என்ற இணையதளத்தின் வாயிலாக மின்னணு ஏல முறையில் விற்பனை நடைபெறும்.

கிளை : ஒசூர் கிளை. கடன் கணக்கின் பெயர் : கடன் பெற்றவர் : M/s.சாய் கிருஷ்ணா ஸ்டீல் இண்டஸ்ட்ரீஸ், பிரதிநிதியாக அதன் பங்குதாரர்கள் : திரு.M.திலீப்குமார், த/பெ.V.முத்துகிருஷ்ணன் மற்றும் திருமதி.V.N.அனிதா, க/பெ.திரு.M.திலீப்குமார், S.F.No.196/1-198/2B, K.தீப்பனப்பள்ளி கிராமம், நெடுமாருதி (அஞ்சல்), பில்லனகுப்பம் பஞ்சாயத்து, வேப்பனபள்ளி பிளாக், கிருஷ்ணகிரி தாலுக்கா - 635115. **உத்தரவாதம் அளித்தவர்கள் : திரு.M.திலீப்குமார், த/பெ.V.முத்துகிருஷ்ணன் மற்றும் திருமதி.V.N.அனிதா, க/பெ.திரு.M.திலீப்குமார்,** குடியிருப்பு முகவரி : A-14, ஈடன் கார்டன், தளி ரோடு, ஓசூர் 635109. **திருமதி.V.வைஜெயந்திமாலா, க/பெ.திரு.K.நடராஜன்,** குடியிருப்பு முகவரி : கதவு எண்.74, வைஜெயந்தி நிவாசா, 1வது மெயின், 3வது குறுக்குத் தெரு, KRC சாலை, ராஜீவ் காந்தி நகர், பொம்மனஹள்ளி, பெங்களூர் - 560068. **திரு.K.நடராஜன், த/பெ.திரு.கண்ணிள்ளை,** குடியிருப்பு முகவரி : கதவு எண்.74, வைஜெயந்தி நிவாசா, 1வது மெயின், 3வது குறுக்குத் தெரு, KRC சாலை, ராஜீவ் காந்தி நகர், பொம்மனஹள்ளி, பெங்களூர் - 560068. **கடன் நிலுவைத் தொகை : 26.02.2026 வரையில் ரூ.Rs.5,69,67,931.00 மற்றும் வட்டி, ஏனைய கட்டணங்கள் சேர்த்து. கேட்பு அறிவிப்பு தேதி : 11.03.2024. சுவாதீனம் எடுக்கப்பட்ட தேதி :** 05.08.2024 & 06.08.2024. **சொத்து விபரம் :** (1) சர்வே எண்.199, புதிய சப்டிவிஷன் சர்வே எண்.199/2, புஞ்சை விஸ்தீரணம் ஹெக்டேர் 0.50.5 (அல்லது) ஏக்கர் 1.25 சென்ட், மதிப்பீடு ரூ.1.35 NP, இதில் ஏக்கர் 0.64 சென்ட் அளவுள்ள நிலம். (2) சர்வே எண்.199, புதிய சப்டிவிஷன் சர்வே எண்.199/1, புஞ்சை விஸ்தீரணம் ஹெக்டேர் 0.77.5, மதிப்பீடு ரூ.2.31, இதில் ஏக்கர் 1.91 சென்ட். மொத்தம் இரண்டு சர்வே எண்களும் சேர்த்து ஏக்கர் 2.55 சென்ட் விஸ்தீரணம் அளவுள்ள நிலம். மேற்கண்ட சொத்தானது புதிய சப்டிவிஷன் சர்வே எண்.199/2A, பில்லனகுப்பம் கிராமம், கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம் மற்றும் பில்லனகுப்பம் கிராம பஞ்சாயத்து எல்லைப்பகுதி மற்றும் வேப்பனப்பள்ளி ஒன்றிய கவுன்சில் பகுதியில் அமைந்துள்ளது. **எல்லைகள் : 1. சர்வே எண்.199, புதிய சப்டிவிஷன் சர்வே எண்.199/2A, ஏக்கர் 0.61 சென்ட் நிலம் பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ளது :** கிழக்கு : திரு.சுப்பிரமணி மற்றும் ஏனையோருக்கு சொந்தமான Sy No 199/2B நிலம், மேற்கு : திருமதி.அனிதா அவர்களுக்கு சொந்தமான Sy No 199/1 நிலம், வடக்கு : Sy No.200 எல்லைகள், தெற்கு : திருமதி.அனிதா அவர்களுக்கு சொந்தமான Sy No 199/1 நிலம். **2. சர்வே எண்.199, புதிய சப்டிவிஷன் சர்வே எண்.199/1, ஏக்கர் 1.91 சென்ட் நிலம் பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ளது :** கிழக்கு : Sy No 190 எல்லைகள், மேற்கு : திருமதி.அனிதா அவர்களுக்கு சொந்தமான Sy No 196 நிலம், வடக்கு : Sy No.200 எல்லைகள், தெற்கு : Sy No 192, தார் சாலை. **இந்த சொத்து திருமதி.V.N.அனிதா அவர்களுக்கு சொந்தமானதாகும். காப்பு விலை : ரூ.76,50,000/-. முன்வைப்புத் தொகை : ரூ.7,65,000/-. ஏலம் உயர்த்திக்கோரும் தொகை : ரூ.1,00,000/-. ஏலம் நடைபெறும் தேதி :** 30.03.2026. **ஏலம் நடைபெறும் நேரம் : காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை 10 நிமிட கால நீட்டிப்புடன்** . சொத்தினை பார்வையிடும் தேதி : **அனைத்து வேலை நாட்களிலும் 02.03.2026 முதல் 17.03.2026 தேதி வரையில் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையில் கிளை மேலாளரின் முன் அனுமதி பெற்று பார்வையிடலாம். முன்வைப்புத் தொகை செலுத்த கடைசி தேதி :** 30.03.2026 மதியம் 1.00 மணி வரை. **சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, ஒசூர் கிளை கிளை, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி : Mob No : 8489903009 / முதன்மை மேலாளர் : Mob No : 8489903057**

நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் : 1. ஏல விற்பனை ஆன்லைன் மின்னணு ஏலம் / ஏலம் கோருதல் என்ற முறையில் https://baanknet.com என்ற இணையதளத்தின் வாயிலாக மேற்குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்தில் (ஏலம் முடிவுக்கு வரும் வரையில் 5 நிமிடம் கால நீட்டிப்புடன்) நடைபெறும். 2. ஏல விண்ணப்பங்களை ஆன்லைன் முறையில் 30.03.2026, மதியம் 1.00 மணி அளவிலோ அல்லது அதற்கு முன்பாகவோ சமர்ப்பிக்க வேண்டும். 3.மின்னணு ஏல விற்பனையானது **"சுவாதீனம் எடுக்கப்பட்டுள்ள நிலையில்"** என்ற அடிப்படையில் நடைபெறும். 4. விருப்பமுள்ள ஏலதாரர்கள் மின்னணு ஏல நடவடிக்கைகளில் கலந்து கொள்ளுதல் மற்றும் ஏல விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் ஆகியவற்றுக்கு முன்பாக https://baanknet.com என்ற இணையதளத்திற்கு சென்று முழு விபரங்களுடன் கூடிய நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை அறிந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். 5. வெற்றிபெற்ற ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர், வருமான வரிச் சட்டம் 1961-ன் உட்பிரிவு 194 IAன் பிரகாரம் ரூ.50.00 லட்சம் மற்றும் அதற்கு மேலான மதிப்பினை உடைய அசையாச் சொத்துக்களின் விற்பனை நடைமுறைகளில் 1% TDS தொகையினை செலுத்த வேண்டும். இத்தொகையினை படிவம் 26QB ல் சலான் (Challan) பூர்த்தி செய்து செலுத்தியதன் பின்னர் அதற்கான TDS சான்றிதழின் அசல் இரசீதினை வங்கியில் சமர்ப்பிக்க வேண்டும். 6. மேலும் சொத்து தொடர்பான விபரங்களை அறிய **சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, ஒசூர் கிளை, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி : Mob No : 8489903009 / முதன்மை மேலாளர் (RO) : Mob No : 8489903057, சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா, மண்டல அலுவலகம், கோயம்புத்தூர், மின்னஞ்சல் முகவரி :recvcoimro@centralbank.co.in,** அவர்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். ஏலதாரர் மேற்கண்ட இணையதளத்தில் பதிவு செய்து கொண்ட பின்னர், விருப்பமுள்ள ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர் பின்வரும் ஆவணங்களை ஏல விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் கடைசி தேதிக்கு முன்பாக இணைய தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். 1) NEFT/RTGS சலான் ஆகியவற்றின் நகல், 2) PAN கார்டு நகல், 3) அடையாளச் சான்று (KYC) சுய சான்றளிக்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை/ஓட்டுனர் உரிமம் / பாஸ்போர்ட், 4) முகவரிச் சான்று, மேற்கண்ட ஆவணங்களை பதிவேற்றம் செய்யாவிடில் ஏல விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை அறியவும்.

தேதி : 26.02.2026
இடம் : ஒசூர்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா

ஒகேனக்கல் வனப் பகுதியில் வறட்சி

தண்ணீர் தேடி சுற்றித்திரியும் யானைகள் !

பென்னாகரம், பிப். 26: ஒகேனக்கல் வனப் பகுதியில் நிலவும் வறட்சி காரணமாக, தண்ணீர் தேடி கிராமப் பகுதிக்குள் யானை உள்ளிட்ட வன விலங்குகள் சுற்றித் திரிகின்றன.

கர்நாடக, ஆந்திர மாநில வனப் பகுதிகளில் வறட்சி நிலவும்போது, யானைகள் கூட்டம் கூட்டமாக தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல், பென்னாகரம் வனப் பகுதிக்குள் இடம்பெயர்வது வழக்கம். அவ்வாறு இடம்பெயரும் யானைகள், பல்வேறு கூட்டங்களாக பிரிந்து வனப்பகுதியில் உள்ள நீரோடைகள், வனத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள தொட்டிகளில் தண்ணீர் குடித்து வந்தன.

நிகழாண்டில் கோடை காலம் தொடங்கும் முன்பே ஒகேனக்கல் மற்றும் பென்னாகரம் வனப்பகுதியில் வறட்சி தொடங்கியுள்ளதால், நீர்நிலைகள் வறண்டு காணப்படுகின்றன. இதனால், தண்ணீர் தேடி வனப் பகுதியில் இருந்து இரவுநேரங்களில் வெளியேறும் காட்டு யானைகளை, வனத்துறையினர் விரட்டும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும், கூட்டுக் குடிநீர் திட்ட சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வெளியேறும் நீர் மற்றும் தண்ணீர் தொட்டிகளில் தண்ணீர் இல்லாததால் தண்ணீர் தேடி சாலையைக் கடந்து யானைகள் செல்கின்றன. அப்போது இரவு நேரங்களில் ஒகேனக்கல் வரும் சுற்றுலாப் பயணிகள் ஒளி, ஒலி எழுப்புவதால் அவை மிரண்டு வாகனத்தை தாக்க முயல்கின்றன.



ஒகேனக்கல் கணவாய் பகுதியில் உள்ள தமிழ்நாடு வடிகால் வாரிய கூட்டுக் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்துக்குள் தண்ணீர் தேடி சென்ற யானை.

தண்ணீர் தொட்டிகளில் நீர் நிரப்ப கோரிக்கை: ஒகேனக்கல் வனச் சரகத்துக்கு உள்பட்ட சின்னாறு, ராசிகுட்டை, வழுக்கல் கோடு, கோவில்பள்ளம் உள்ளிட்ட பகுதிகளில் யானை நடமாட்டம் அதிக அளவில் உள்ளதால், அப்பகுதியில் வனத்துறை சார்பில் சுமார் 10-க்கும் மேற்பட்ட தண்ணீர் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த தொட்டிகள் முறையாக பராமரிக்காததால், யானை உள்ளிட்ட வன விலங்குகளுக்கான தண்ணீர் தொட்டிகளை முறையாக பராமரித்து, வனத்தைவிட்டு வனவிலங்குகள் வெளியேறாத வகையில் தண்ணீர் நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என வன உயிரின ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து வனச்சரக அலுவலர் சிவகுமார் கூறியதாவது:

கோடை காலத்துக்கு முன்பே வறட்சி நிலவுவதால், மாவட்ட வன அலுவலர் ராஜாங்கம் உத்தரவின் பேரில் வனப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள தண்ணீர் தொட்டிகள் சுத்தம் செய்யப்பட்டு தண்ணீர் நிரப்ப ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. ஒரு சில தொட்டிகளுக்கு வாகனத்தின் மூலம் தண்ணீர் கொண்டு செல்ல முடியாததால், அந்த தொட்டிகளுக்கு மாற்றுவழியில் நீர்நிரப்பும் பணி மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், பென்னாகரம் வனச் சரகத்துக்கு உள்பட்ட கூத்தப்பாடி, சின்னப் பநல்லூர், புதுக்காடு உள்ளிட்ட பகுதிகளில் திரிந்த சுமார் 9 யானைகள் அண்மையில் பேவனூர் வனப் பகுதிக்குள் விரட்டியடிக்கப்பட்டன. கிராமப் பகுதிக்குள் யானைகள் நுழைவதை தடுக்க தலா ஐந்துபேர் கொண்ட குழு என பத்துக்கும் மேற்பட்ட குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பென்னாகரம் வனப் பகுதியில் யானைகள் நடமாட்டம் உள்ள இடங்களைக் கண்டறிந்து, அப்பகுதியில் இரண்டு தண்ணீர் தொட்டிகள் கட்டப்பட்டு நீர்நிரப்பும் பணி நடைபெற்று வருகிறது என்றார்.

epaper.dinamani.com